In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்த, ஆயுர்வேத, யுனானி மருந்துகளின் பயன் குறிப்பகராதி

இந்திய மருத்துவர்கள்
கூட்டுறவு மருந்து செய் நிலையம்
மற்றும் பண்டகசாலை, சென்னை - 41

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதல் பதிப்பு	-	1963
இரண்டாம் பதிப்பு	-	1965
மூன்றாம் பதிப்பு	-	1966
நான்காம் பதிப்பு	-	1968
ஐந்தாம் பதிப்பு	-	1970
ஆறாம் பதிப்பு	-	1971
ஏழாம் பதிப்பு	-	1972
எட்டாம் பதிப்பு	-	1973
ஒன்பதாம் பதிப்பு	-	1974
பத்தாம் பதிப்பு	-	1976
பதினோறாம் பதிப்பு	-	1977
பன்னிரண்டாம் பதிப்பு	-	1978
பதிமூன்றாம் பதிப்பு	-	1980
பதிநான்காம் பதிப்பு	-	1982
பதினைந்தாம் பதிப்பு	-	1984
பதினாறாம் பதிப்பு	-	1988
பதினேழாம் பதிப்பு (திருத்திய பதிப்பு)	-	1990
பதினெட்டாம் பதிப்பு	-	1993
பத்தொன்பதாம் பதிப்பு	-	1994
இருபதாம் பதிப்பு	-	1998
இருபத்தொன்றாம் பதிப்பு	-	1999
இருபத்திரெண்டாம் பதிப்பு	-	2001

இறைவன் அருளிய நோயற்ற வாழ்வே செல்வத்தை விடச் சிறந்தது. அதுவே சந்தோஷத்திற்கு மூல காரணம்.

- ஷைகுர் ரெபரிஸ்

101 வழிகளில் மரணம் ஏற்படலாம். வயது நன்கு முதிர்ந்து ஏற்படுவது ஒன்றுதான் இயற்கையானது. மற்றவைகளைத் தடுக்க வேண்டும்.

- ஸுச்ருதர்

நன்மை பயக்கும் உணவு, நன்நடத்தை, யோசித்துச் செயல்படுதல். அதிக பற்றின்மை, தாராளம், வாய்மை, பொறுமை, நல்லிணக்கம். இவைகள் ஆரோக்கியமான வாழ்வை அளிக்கின்றன

- வாஹடர்

வைகறைத் துயிலெழு

- தமிழ்

கதிரவன் உதிக்கும் முன் 48 விநாடி அளவில் துயிலெழுந்து உடலும் மனமும் செயல்படுவதை ஆராய வேண்டும்.

- வாஹடர்

அதிகாலையில் முகத்தையும், முக்கியமாகக் கண்களையும் குளிர்ந்த தண்ணீரால் கழுவுக.

- ஸுச்ருதர்

தினமும் எண்ணெய் அல்லது நெய் தேய்த்துக் குளிக்கவும்.

- வாஹடர்

கதிரவனின் ஒளிக்கதிர்களைப் போதுமளவு உடலில் விழச் செய்து வியர்ப்பித்துக் கொள்க.

- வாஹடர்

உடற்பயிற்சி செய்து உடலை நன்கு பிடித்து விடுக.

- சரகர்

கூழானாலும் குளித்துக் குடி.

- ஔவை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்த, ஆயுர்வேத, யுனானி மருந்துகளின்

உபயோகக் குறிப்பு அட்டவணை - மருந்துகள் வரிசை

IMPCOPS

வெளியிட்டாளர் :

தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ்
பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட்

Dr. முத்துலட்சுமி சாலை, திருவான்மியூர், சென்னை - 600 041.

2001

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முகவுரை

இம் மருத்துவர் கூட்டுறவு நிறுவனத்தால் தயாரிக்கப்படும் சித்த, ஆயுர்வேத, யுனானி மருந்துகளின் உபயோகம், அனுபானம், அளவு ஆகியன அடங்கிய இம்மருந்துகளின் உபயோகக் குறிப்பு அட்டவணை, "மருந்துகள் வரிசை" முறையில் தமிழில் தக்கத் திருத்தங்களுடன் பதினெட்டாம் பதிப்பாக வெளியிடப்படுகின்றது. சில முக்கிய குறிப்புகளை அறிதற்பொருட்டு இந்நூலுடன் தொடர்புடைய சித்த, ஆயுர்வேத, யுனானி மருந்துகளின் செய்முறை புத்தகங்களையும் இதனுடன் ஒப்பு நோக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். இப் பதிப்பில் யுனானி மருந்துகளின் பிரிவில் நோய்களுக்கான யுனானி மருத்துவப் பெயர்கள் முடிந்த மட்டில் தமிழ் வார்த்தைகளுக்குப் பக்கத்திலேயே அடைப்புக் குறியிட்டு கொடுக்கப்பட்டுள்ளன. இதே போன்று இனி அடுத்து வரும் பதிப்பில் முறையான சித்த, ஆயுர்வேத பாரம்பரியக் கலைச் சொற்களை அந்தந்தப் பிரிவுகளின் கீழ் இடம் பெறச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இஃது இந்நிறுவனத்தின் உறுப்பின மருத்துவர்கட்கும், ஏனைய மருத்துவர்கட்கும் பெரிதும் பயனளித்திடும் என நம்புகின்றோம்.

நூல் வெளியீட்டாளர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இம்பகாப்ஸ் மருத்துவமனையிலுள்ள மருத்துவ வசதிகள்:

புறநோய்ப்பிரிவு : தொலைபேசி எண்: 4910711

இயங்கும் நேரங்கள்:

வார நாட்கள்: காலை 9.00 முதல் 11.00 மணி வரை மாலை 5.00 முதல் 7.00 மணி வரை

சனிக்கிழமை: காலை 9.00 முதல் 11.00 மணி வரை மாலை 2.00 முதல் 7.00 வரை

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை. தேசிய மற்றும் ஏனைய விடுமுறை நாட்களில் குறிப்பாக ஜனவரி முதல் தேதி, பொங்கல், தமிழ் வருடப்பிறப்பு மற்றும் தீபாவளி போன்ற நாட்கள் நீங்கலாக ஏனைய அனைத்து நாட்களிலும் இயங்கும்.

மருத்துவ ஆலோசனை நாட்கள்:

சித்த மருத்துவப் பிரிவு: செவ்வாய், வியாழன் & சனி

ஆயுர்வேத மருத்துவப் பிரிவு: திங்கள் & புதன்

யுனானி மருத்துவப் பிரிவு: வெள்ளி & சனி.

அகநோய்ப் பிரிவு:

(அ) சித்த மருத்துவப் பிரிவு:

காளாஞ்சப்படை (Psorasis) போன்ற நாட்பட்ட தோல்நோய்கள், இரைப்பிருமல் எனும் ஸ்வாஸகாஸம் (Bronchial Asthma), சோபை (Oedema) போன்ற நோய்களுக்கு சித்த மருத்துவ இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள முப்பத்திரண்டு வகை அகமருந்துகளாலும், முப்பத்திரண்டு வகை புறமருந்துகளாலும் சிறப்பான சிகிச்சை அளிக்கப்படுகிறது.

(ஆ) ஆயுர்வேத மருத்துவப் பிரிவு:

எலும்புப்பூட்டு வாதம் எனும் சந்தி வாதம் (Arthritis), இணைப்புத் திசுக்களில் ஏற்படும் வலி, விறைப்புத் தன்மை மற்றும் ஆம வாதம் (Rheumatism), நரம்புக் கோளாறுகள் (Nervous Disorders) ஆகியவற்றுக்குக் கீழ்காணும் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

1. தாரா, சிரோவஸ்தி, பிச்சு, காயஸேகம் போன்ற ஸ்நேகன கர்ம எனும் மருந்துத் தைலமிட்டுப் பிடித்தும் உருவியும் விடும் சிகிச்சை (Oleation therapy) மற்றும் உள்ளுக்குக் கிருதபானம் முதலியன.
2. அன்னலேபனம், பிண்டஸ்வேதம், பத்ரபங்கஸ்வேதம், அவகாக ஸ்வேதம் போன்ற ஸ்வேதனகர்ம என்னும் வியர்ப்பிக்க வைக்கச் செய்யும் சிகிச்சை (Sundation therapy).
3. ஸ்நேகவஸ்தி, கக்ஷியவஸ்தி போன்ற ஆசனவாயின் மூலம் மருந்து செலுத்தும் பஸ்திகர்ம சிகிச்சை (Enema therapy).
4. தோளுக்கு மேலுள்ள அவயங்களிலுள்ள வரும் நோய்களுக்கு முக்கில் மருந்திடும் கஸ்யகர்ம சிகிச்சை (Errhine therapy).
5. ஆச்யோதனம்,அஷிதர்ப்பணம் போன்ற கண் நோய்களுக்கு மருத்துவம் செய்யும் முறை (Special Ophthalmic).
6. கண்டூஷம் மற்றும் கவனக்கிரஹம் எனும் நோய்களுக்கு வாயில் மருந்திடும் முறை(Broncial cavity medication).

(இ) யுனானி மருத்துவப்பிரிவு:

மஞ்சட் காமாலை எனும் யர்ஹான் (Jaundice) கல்லீரல்,மண்ணீரல் எனும் வரம்-எ-கபித், வரம்-எ-தெஹால்(Hepatatis and splenomagaly) மகோதரம் எனும் வரம்- எ-ஷி-காம்(அ)இஸ்திரிகா-எ-ஜிக்கி(Ascitis).இரைப்பை மற்றும் குடற் புண்கள் எனும் குரு-எ-மேதா(Peptic ulcer)ஆகியவற்றிற்கு யுனானி இலக்கியங்களிலுருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முறைகளால் நம்பிக்கையூட்டும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மற்ற பிணிகளால் பாதிக்கப்பட்ட நோயாளிகளும்,நிலைமைக்கு ஏற்ப மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவர்.வெளியூரிலிருந்து வந்து,குடும்பத்துடன் தங்கி,சிகிச்சை பெற விழையும் நோயாளிகளின் வசதிக்காக குடில்களும் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

	தலைப்பு	பக்கம்
I.	**சித்த மருந்துகளின் பயன் குறிப்பகராதி**	1-37
பிரிவு-1	மாத்திரைகள் (ஆ: குடிகா & வடீ, யு: ஹப் & குர்ஸ்)	1
பிரிவு-2	செந்தூரம் (ஆ: ஸிந்தூர)	7
பிரிவு-3	பற்பம் (ஆ: பஸ்ம, யு: குஷ்தா)	10
பிரிவு-4	சுண்ணம்	14
பிரிவு-5	பதங்கம் (ஆ: பதங்க, யு: ஜௌஹர்)	15
பிரிவு-6	மெழுகு, குழம்பு & மை	15
பிரிவு-7	சூரணம் (ஆ: சூர்ண, யு: ஸபூஃப்)	18
பிரிவு-8	இலேகியம் (அ) இளகம் (ஆ: லேஹ்ய, யு:- மாஜூனாத்தின் உட்பிரிவுகள்)	21
பிரிவு-9	இரசாயனம் (ஆ: ரஸாயன)	23
பிரிவு-10	வடகம் (ஆ: வடீ, யு: பனடிக்)	23
பிரிவு-11	தைலம் (ஆ: தைல; யு: ரௌகன்)	24
பிரிவு-12	நெய் (ஆ: க்ருத)	30
பிரிவு-13	கற்பம்	32
பிரிவு-14	தீநீரும் திராவகமும் (ஆ: அர்க்க & திராவக யு: அரக்)	32
பிரிவு-15	புற மருந்துகள்	
(a)	வெண்ணெய் (ஆ: லேப; யு: மர்ஹம்)	33
(b)	மெழுகு & களிம்பு (ஆ: லேப; யு: மர்ஹம்)	33
(c)	தூவுபொடி (ஆ: விசேஷபனசூர்ண, யு: ஜரூர்)	34
(d)	நீர் (ஆ: கண்டுஷ, கவளக்கிரக, யு: கராரா)	34
(e)	பற்று (ஆ: ஆலேபன சூர்ண, யு:- ஜிமாத்)	34
பிரிவு-16	மணப்பாகு (ஆ: பானக; யு:- ஷர்பத்)	35
பிரிவு-17	கருப்பு	35
பிரிவு-18	குடிநீர்ச் சூரணம் (ஆ:- க்வாத சூர்ணம், யு: ஜோஷந்தா)	36

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலைப்பு		பக்கம்
II. ஆயுர்வேத மருந்துகளின் பயன் குறிப்பகராதி		38-83
பிரிவு-1	அர்க்கங்கள் (சி:தீநீர். யு:அரக்)	38
பிரிவு-2	ஆஸவங்களும் அரிஷ்டங்களும்	38
பிரிவு-3	சூர்ணங்கள் (சி: சூரணம். யு:-ஸபூஃப்)	41
பிரிவு-4	க்ருதங்கள் (சி: நெய்)	46
பிரிவு-5	வடீ & குடிகா (சி:மாத்திரை & குளிகை. யு:-குர்ஸ் & ஹப்)	49
பிரிவு-6	லவணக்ஷாரங்கள் (சி:- காரசாரம்)	50
பிரிவு-7	க்வாத சூர்ணங்கள் (சி: குடிநீர்ச் சூரணம் யு: ஜோஷந்தா)	50
பிரிவு-8	லேஹ்யங்கள் (சி: லேகியம் (இளகம்). யு:- மாஜுனாத்தின் பல பிரிவுகள்)	52

தலைப்பு		பக்கம்
பிரிவு-9	லேபங்கள் (சி: களிம்பு. மெழுகு. வெண்ணெய் யு:- மர்ஹம்)	55
பிரிவு-10	நேத்ரரோக மருந்துகள்-வர்த்தி & அஞ்ஜனா (சி:- கண் மருந்துகள்- வர்த்தி & மை)	56
பிரிவு-11	பானகங்கள் (சி: மணப்பாகு. யு: ஷர்பத்)	57
பிரிவு-12	ஸத்வம் (சி: சத்துவம்)	57
பிரிவு-13	தைலங்கள் (சி: தைலம். யு: ரௌகன்)	57
பிரிவு-14	கனிஜப் பொருள்களால் ஆன தயாரிப்புகள் -பஸ்மங்கள் (சி:- பற்பம்; யு:- குஷ்தா)	63
பிரிவு-15	ஸிந்தூரங்கள் (சி: செந்தூரம்)	67
பிரிவு-16	பர்படீ	70
பிரிவு-17	ரஸௌஷதங்கள்	71

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

	தலைப்பு	பக்கம்
III.	யுனானி மருந்துகளின் பயன் குறிப்பகராதி	84-135
பிரிவு-1	அரக்கியாத் & குதூர் (ஆ: அர்க்க & நேத்ர பிந்து. சி: தீநீர் & கண் துளிமருந்து) (ஸைய்யாலாத்தின் உட்பிரிவு)	84
பிரிவு-1A	ஜௌஹர் (ஆ:பதங்க,சி:பதங்கம்)	86
பிரிவு-2	அத்வியா (மாஜூனாத்தின் உட்பிரிவு)	87
(a)	அனோஷ்தாரு	87
(b)	தவா	88
பிரிவு-3	ஹபூபாத் (சி:- மாத்திரைகள் & குளிகைகள். ஆ:வடீ & குடிகா)	90
பிரிவு-4	ஹல்வாஜாத் (மாஜூனாத்தின் உட்பிரிவு)	94
பிரிவு-5	இத்ரிபலாத் (மாஜூனாத்தின் உட்பிரிவு)	96
பிரிவு-6	ஜவாரிஷாத் (மாஜூனாத்தின் உட்பிரிவு)	100
பிரிவு-7	கமீராஜாத் (மாஜூனாத்தின் உட்பிரிவு)	105

	தலைப்பு	பக்கம்
பிரிவு-8	அக்ராஸ் (ஆ) குர்ஸ் (சி: மாத்திரை, ஆ: வடி)	108
பிரிவு-9	குஷ்தாஜாத் (ஆ: பஸ்ம, சி - பற்பங்கள்)	110
பிரிவு-10	லபூபாத் (மாஜூனாத்தின் உட்பிரிவு)	114
பிரிவு-11	லவுகாத் (மாஜூனாத்தின் உட்பிரிவு)	115
பிரிவு-1:	மாஜூன் (மாஜூனாத்தின் உட்பிரிவு)	116
பிரிவு-13	முபர்ரஹாத் (மாஜூனாத்தின் உட்பிரிவு)	120
பிரிவு-14	மர்ஹம் (ஆ: லேப, சி: களிம்பு, வெண்ணெய், மெழுகு)	122
பிரிவு-15	ஸனூன் (ஆ: தந்ததாவன சூர்ண சி: பற்பொடி) (ஸபூஃபாத்தின் உட்பிரிவு)	123
பிரிவு-16	ரௌகனியாத் (ஆ:- தைல, சி:- தைலம்)	123
பிரிவு-17	ருப்பாஜாத்	126

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

	தலைப்பு	பக்கம்
பிரிவு-18	ஸபூபாத் (ஆ: சூர்ண, சி: சூரணம்)	128
பிரிவு-19	ஸிகன்ஜபீனாத் (ஆ: காஞ்சிக பானக, சி:- காடி கலந்த மணப்பாகு) (ஸைய்யலாத்தின் உட்பிரிவு)	129
பிரிவு-20	அஷ்ரிபா (அ) ஷர்பதாத் (ஆ:பானக சி: மணப்பாகு) (ஸைய்யலாத்தின் உட்பிரிவு)	130
பிரிவு-21.	ஜிமாதாத் (ஆ: ஆலேபன சூர்ண, சி:- பற்றுப் பொடி) (மர்ஹத்தின் உட்பிரிவு)	135
பிரிவு-22	ஜரூர் (ஆ:- விகேஷபன சூர்ண, சி: தூவு பொடி) (ஸபூஃபாத்தின் உட்பிரிவு)	135

IV. பின்னிணைப்பு:-

	தலைப்பு	பக்கம்
	சில மருந்துகளின் ஒத்த மறுபெயர்கள்	136-139
(a)	தயாரிப்புகள்	136
(b)	தயாரிப்பு முறைகள்	137
(c)	அந்தந்த முறைகளுக்கு மட்டுமே உரித்தான சில சிறப்புத் தயாரிப்புகள்	138

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்த மருந்துகளின் பயன் குறிப்பகராதி

பிரிவு - 1 மாத்திரைகள் (ஆ : குடிகா & வடீ, யு: ஹப் & குர்ஸ்)

	பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
1.	அமிர்தாதிக் குளிகை (500 மி.கி. மாத்திரை) பாலவாகடம்	மாந்தம், குடற்படுவன், கரப்பான், நாவறட்சி, வயிற்றெரிவு, மாந்தசுரம், இருமல், உப்பசம், மாந்தம், வாந்தி, நீர்ப்பாடு, விடாச்சுரம், பொருமல்.	வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் இரு வேளைகள் மாசிப்பத்திரிக் கியாழத்துடன் (மற்ற அனுபானங்களுக்கு சி. ம. செ. ம. புத்தகத்தைப் பார்க்கவும்.)
2	அஷ்டபைரவம் (100 மி. கி. மாத்திரை)- சித்த வைத்தியத் திரட்டு	விஷம், தோஷம், ஜ்வரம், மலமிளக்கிச செய்கையுடையது.	ஒரு வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தகுந்த அனுபானத்துடன் 2 வேளைகள்.
3.	ஆனந்தபைரவம் (100 மி.கி. மாத்திரை) சித்த வைத்தியத் திரட்டு	எல்லாவித ஜ்வரங்களும், ஜன்னிகளும். முக்கியமாக சீதாங்கஜன்னிக்கு ஏற்றது.	வேளைக்கு 1-2 மாத்திரை வீதம் காலை, மாலை தேன் அல்லது இஞ்சிச் சாறுடன்.
4.	பாலசஞ்சீவி மாத்திரை (100 மி.கி. மாத்திரை) பாலவாகடம்	மாந்தம், கணம், ஜ்வரம், பேதி, பித்தம், வாந்தி, இருமல், மூலம், சுவாசம், காசம், நாமுள், மூலம், இரத்தகணம், பித்த இருமல்.	1-2 மாத்திரை வீதம் தகுந்த அனுபானத்துடன் இருவேளைகள்.
5.	பிரம்மானந்த பைரவம் (100 மி.கி. மாத்திரை) - சித்த வைத்தியத் திரட்டு	சகல ஜ்வரங்களும், ஜன்னிகளும்.	வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தேனும் இஞ்சிச்சாறும் சேர்த்து 2 வேளைகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

	பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
6.	கோரோசனை மாத்திரை (100 மி.கி. மாத்திரை) அகஸ்தியர் ரத்தினச்சுருக்கம் & சித்த வைத்தியத் திரட்டு	வாத, கபஜுரம், மயக்கம், ஜலதோஷம், மண்டை சூலை, சன்னி, குழந்தைகளின் வலிப்பு, மாந்தம் (அண்டத்தைலத்துடன்), சகல தோஷம் (தேனுடன்), அள்ளுமாந்தம், முக்குமாந்தம்.(மாந்தக்குடிநீருடன்)	1-2 மாத்திரை வீதம் தகுந்த அனுபானத்துடன் (அ) தேன் (அ) தாய்ப் பாலுடன் இரு வேளைகள்.
7.	கந்தக மாத்திரை (50 மி. கி. மாத்திரை) அகஸ்தியர் ரத்தினச்சுருக்கம் & சித்த வைத்தியத் திரட்டு.	நாட்பட்ட சுரங்கள்	1-2 மாத்திரை வீதம் தகுந்த அனுபானத்துடன் இரு வேளைகள்.
8.	ஜலோதரிமணி (200 மி.கி. மாத்திரை) தேரையர் கரிசல் - 300	அண்டவாயு, ஜுரவாயு, மேல் (அந்தர) வாயு, ஜுரம், இருமல், நீரடைப்பு, சதையடைப்பு, மலக்கட்டு.	1-2 மாத்திரை வீதம் தண்ணீர் (அ) தேன் (அ) பாலுடன் இரு வேளைகள்.
9.	காக்கண மாத்திரை (100 மி.கி. மாத்திரை) பாலவாகடம்	சகல மாந்தமும் (சுக்குக் கியாழத்தில்) வயிற்றுப் பூச்சிகளும் (ஓமக் கியாழத்தில்). மற்றும் மலக்கட்டு.	1-2 மாத்திரை வீதம் தகுந்த அனுபானத்துடன் காலையில் மட்டும்.
10.	குஷ்டகஜகேசரி (100 மி.கி. மாத்திரை) சித்த வைத்தியத் திரட்டு	குஷ்டம், வெண்குஷ்டம், மேகம், சகல விதமான நாட்பட்ட சரும நோய்கள் (தோல் நோய்கள்).	1-2 மாத்திரை வீதம் தேனுடன் சர்க்கரை சேர்த்து இரு வேளைகள்.
11.	கபாட மாத்திரை (100 மி. கி. மாத்திரை) - தேரையர் கரிசல் - 300	அதிஸாரம், கிராணி, இரத்தக்கடுப்பு, மூலக்கடுப்பு (மாதுளம் பிஞ்சுச் சாறு (அ) கியாழத்துடன்). இரத்த மூலம் (தண்ணீருடன்), பலவித கிராணிகள் (நிணக்கழிச்சல்கள்).	வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் நாளொன்றுக்கு 2-3 வேளைகள் தேன் (அ) வாழைப்பூச் சாற்றில்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

	பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
12.	கருப்பு விஷ்ணுச்சக்கரம் (100 மி.கி. மாத்திரை) அப்துல்லா ஸாஹேப்பின் வீரமாமுனிவர் வாகடத் திரட்டு.	எல்லாவித ஜன்னி, அண்டவாதம், திமிர் வாதம், இளம்பிள்ளை வாதம், பாரிசவாதம், தனுர்வாதம், பீனிசம், செவிரோகம், வலிப்புகள், ஜுரம், இருமல், எரிகுன்மம், குட்டம்.	1/2 - 1 மாத்திரை வீதம் தாய்ப்பால் (அ) தேனுடன் இரு வேளைகள்.
13.	கஸ்தூரி மாத்திரை (50 மி.கி. மாத்திரை) பாலவாகடம் & தேரையர் பாடல் திரட்டு.	ஜன்னி, பித்த சீதளம், சன்னி பாத தோஷம், குழந்தைகளின் எல்லாவகை சுரங்கள், சந்தி வாத தோஷம் (தேனில் கொடுக்க).	1-2 மாத்திரை வீதம் தாய்ப்பால், தேன், துளசி (அ) வெற்றிலை சாற்றுடன் இரு வேளைகள்.
14.	இலவங்காதி மாத்திரை (100 மி.கி. மாத்திரை) சித்த வைத்தியத் திரட்டு	வாத கப வியாதிகளில் பேதியாக்கி குணமாக்கும். மற்றும் மலம் கழியவும் பயனாகும்.	3-5 மாத்திரை வீதம் வெந்நீருடன் காலை ஒரு வேளை மட்டும்.
15.	இலிங்கபூபதி (100 மி. கி. மாத்திரை) சித்த வைத்தியததிரட்டு	ஜுரம், வயிற்றுக் கிருமிகள்.	1-2 மாத்திரை வீதம் தேன், இஞ்சிச்சாறு (அ) தாய்ப் பாலுடன் இரு வேளைகள்.
16.	குங்குமப்பூ மாத்திரை (100 மி.கி. மாத்திரை) பாலவாகடம்.	நீர்க்கோவை, கபகுன்மம், நாட்பட்ட மலபந்தம், அதி வியர்வை.	1-2 மாத்திரை வீதம் தேன், இஞ்சிச்சாறு (அ) தாய்ப் பாலுடன் இரு வேளைகள்.
17.	மகா ஏலாதிக் குளிகை (100 மி.கி. மாத்திரை) சித்த வைத்தியத் திரட்டு	தாபஜுரம், கண்காசம், கண்ணோய், காமாலை, சோபை, கல்லடைப்பு, நீரிழிவு, உழலை, எரிவு, சைப்பு வாந்தி. இது ஒரு கல்ப மருந்து.	1-2 மாத்திரை வீதம் இளநீர், பாலும் சர்க்கரையும், தேன் (அ) பழரசத்துடன் 45 நாட்களுக்கு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

	பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
18.	மேகநாதக் குளிகை (100 மி.கி. மாத்திரை) அகஸ்தியர் சில்லரைக் கோவை.	குளிர் சுரம், வயிற்றுவலி, என்புருக்கி, செரியாமை, வயிற்றுத்திரை, மலபந்தத்துடன் கூடிய ஜுரம், கிருமிகோஷ்டம், பாண்டு, சோபை, குன்மத்தில் மலம் பிரிய, பேதியாக.	2- 4 மாத்திரை வீதம் சுக்குக் கியாழத்துடன் இரு வேளைகள்.
19.	மகாவஸந்த குஸுமாகரம் (100 மி.கி. மாத்திரை) சித்த வைத்தியத் திரட்டு	கபரோகம் (தேன் சர்க்கரையுடன்), அஜீரணம், வாதநோய்கள், காஸம், சுவாசகாசம், க்ஷயரோகம், ஜுரங்கள், அஜீரணபித்தம், இளைப்பு நோய், எலும்புருக்கி நோய், வீக்கம், மூலம், பிரமேகம், நீர்க்கட்டு, அதிசாரம், ஊழிபேதி, கிராணி, வயிற்று வலி, மந்தாக்கினி, சோபை, பாண்டு, காமாலை, குட்டம், மார்பு நோய், குன்மம், சன்னி, சூதகவாயு, அபஸ்மாரம், வைத்தியம்.	ஒரு மாத்திரை வீதம் தகுந்த அனுபானத்துடன் தினமும இரு வேளைகள்.
20.	முருக்கன்விதை மாத்திரை (100 மி.கி. மாத்திரை) பாலவாகடம்	குடல்புழுக்கள், மாந்தம், வயிற்று உப்புசம், கபக் கட்டு (சீதக்கட்டு), கொள்ளை, கவிசை, (இளநீர், நெய், பால், வாழைப்பழத்தோடும் கொடுக்கலாம்).	1-2 மாத்திரை வீதம் படுக்கு முன் தண்ணீரும் சர்க்கரை (அ) வெல்லமும்
21.	நீர்க்கோர்வை மாத்திரை (500 மி.கி. மாத்திரை) - சித்த வைத்தியத் திரட்டு	தலைவலி, ஜலதோஷம், தலையில் நீரேற்றம்.	தாய்ப் பாலில் இழைத்து நெற்றியில் பற்றிடவும்.
22.	பச்சைக்கற்பூர மாத்திரை (100 மி.கி. மாத்திரை) சித்த வைத்தியத்திரட்டு	கடும் ஜுரம், தாபஜுரம் (வெப்பசுரம்), எல்லா விதமான வாத, பித்த, கப நோய்கள்.	1-2 மாத்திரை வீதம் தேனும் இஞ்சிச்சாறும் சேர்த்து காலையில் மட்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

	பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
23.	பிரளயகாலருத்திரன் சித்தவைத்தியத் திரட்டு	காலரா, விஷஜுரம், அதிஸாரம், அஜீரண ஜுரம்.	50 - 100 மி. கி. வீதம் தேனுடன் 2 - 3 வேளைகள்.
24.	பூரமாத்திரை (100 மி.கி. மாத்திரை) சிமிட்டு இரத்தினச்சுருக்கம்.	குழந்தைகளின் மாந்தம்.	ஒரு மாத்திரை வீதம் தேன் அல்லது தாய்ப்பாலுடன் இரு வேளைகள்.
25.	இராஜராஜேஸ்வரம் (100 மி. கி. மாத்திரை) சித்த வைத்தியத் திரட்டு	பதிமூன்று வகையான ஜன்னி ரோகங்கள் மற்றும் ஜுரங்கள்.	காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் திரிகடுகுக்கியாழத்துடன்.
26	சூலைபூபதி (100 மி. கி. மாத்திரை) சித்த வைத்தியத் திரட்டு.	சகல விதமான சூலைகளும், குன்மமும். வீதம் தகுந்த அனுபானத்துடன்.	காலை, மாலை ஒரு மாத்திரை
27.	சஞ்சீவி மாத்திரை (100 மி.கி. மாத்திரை) அகஸ்தியர் - 600	மூலவாயு, விஷக்கடி, வாயு, மூலம், சூலை, க்ஷயம், ஜுரம், மாந்தம், வலிகுன்மம்.	1-2 மாத்திரை வீதம் தகுந்த அனுபானத்துடன்.
28.	சாந்தச் சந்திரோதயம் (100 மி.கி. மாத்திரை) சித்த வைத்தியத் திரட்டு.	பித்த ஜுரம். அல்லது வெற்றிலைச் சாற்றுடன்	1-2 மாத்திரை வீதம் தேன் இரு வேளைகள்.
29.	சுவாச குடோரி (100 மி.கி. மாத்திரை) சித்தவைத்தியத் திரட்டு	சுவாஸம், காஸம், சுவாஸகாஸம் (இரைப்பிருமல்)	1-2 மாத்திரை வீதம் தாளீசப்பத்திரிக் குடிநீருடன் இரு வேளைகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அநுபானமும்
30. சூலைகுடாரம் (100 மி. கி. மாத்திரை) சித்த வைத்தியத் திரட்டு.	சூலை, குன்மம்.	1-2 மாத்திரை வீதம் இஞ்சிச் சாறுடன் காலையில்.
31. தாழம்பூ மாத்திரை (100 மி.கி. மாத்திரை.) - சித்த வைத்தியத் திரட்டு.	குடல்வாயு, நெரிக்கட்டி ஜுரம், பிளேக். மலம் போகும்.	1-2 மாத்திரை வீதம் தேன் (அ) வெந்நீரில்.
32. திரிதோஷ மாத்திரை (100 மி.கி. மாத்திரை) சித்த வைத்தியத் திரட்டு.	குளிர் ஜுரம், கபஜுரம், ஜன்னி.	1-2 மாத்திரை வீதம் மிளகுக் கியாழத்துடன்.
33. வசந்த குஸுமாகரம் (100 மி.கி. மாத்திரை) சித்த வைத்தியத் திரட்டு	நாட்பட்ட ஜுரம், கபகாஸம், தாகம், தும்மல், ஏப்பம், சிறுநீர் நோய்கள்.	1-2 மாத்திரை வீதம் தேன், இஞ்சிச்சாறு (அ) தாய்ப் பாலுடன் இரு வேளைகள்.
34. விஷ்ணுச்சக்கரம் (100 மி.கி. மாத்திரை) அகஸ்தியர் சில்லரைக் கோவை	பக்கசூலை, சோபை, 13 வகை ஜன்னிகள், ஏப்பம், விக்கல், மூர்ச்சை, பக்கவாதம், வாயு.	1-2 மாத்திரை வீதம் தேன், இஞ்சிச்சாறு, திரிகடுகுச் சூரணம் சேர்த்து.
35. வாதராக்ஷசன் (100 மி. கி. மாத்திரை) அகஸ்தியர் இரத்தினச் சுருக்கம்.	ஜன்னி, வாதம், தோஷம்.	1-2 மாத்திரைகள் வீதம் தேன் (அ) தண்ணீருடன் 2 - 3 வேளைகள்.
36. வெங்கார மாத்திரை (500 மி.கி. மாத்திரை) - சித்த வைத்தியத் திரட்டு.	எண்வகை குன்மம், சூலை, அண்டவாதம், விப்புருதி, பாண்டு, மகோதரம், நீராம்பல். மற்றும் பேதியுண்டாக்க.	1-2 மாத்திரை வீதம் தகுந்த அநுபானத்துடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
37. விரேசன பூபதி (100 மி. கி. மாத்திரை) பாலவாகடம்	பாண்டு, மகோதரம், பொருமல், ஊதுமாந்தம். வாத, கபரோகத்தில் மலம் போக.	2-4 மாத்திரை வீதம் தண்ணீருடன் இரு வேளைகள்.

பிரிவு - 2 செந்தூரம் (ஆ : ஸிந்தூர)

38. அப்பிரகச் செந்தூரம் (30 புடம்) - இம்ப்காப்ஸ்	இருபத்தியொரு வகை மேகம் (மதுமேகம், நீரிழிவு).	100 - 200 மி. கி. வீதம் தேனுடன் தினமும் 2 வேளைகள்.
39. அன்னபேதிச் செந்தூரம் நெ 1 சித்த வைத்தியத் திரட்டு.	ஜுரம், சீதபேதி, காமாலை, பாண்டு, சோகை.	100-200 மி. கி. தேனுடன் இரு வேளைகள்.
40. அன்னபேதிச் செந்தூரம் நெ. 2- சித்த வைத்தியத் திரட்டு.	சோகை, பாண்டு, காமாலை, மகோதரம்.	100-200 மி. · கி. தேனுடன் இரு வேளைகள்.
41. ஆறுமுகச் செந்தூரம் - சித்த வைத்தியத் திரட்டு.	பாண்டு, வாதரோகம், சோகை, கண்டமாலை, அரையாப்பு, சூலை, குன்மம், அதிஸாரம், தலைவலி, விதைவாதம், மூலம், கிரந்தி, குடல்வாதம்.	100-200 மி. கி. தேன், திரிகடுகுச் சூர்ணம் சேர்த்து இரு வேளைகள்.
42. அயச் செந்தூரம் - சித்த வைத்தியத் திரட்டு	வாத, பித்த, கபரோகம், பாண்டு, சோகை, நீராம்பல், விந்துநஷ்டம், விந்து விரைந்து வெளியேறல்.	100-200 மி. கி. தேன் அல்லது பசு நெய்யுடன் தினம் இரண்டு அல்லது மூன்று வேளைகள்.
43. அயகாந்தச் செந்தூரம் நெ 1 - அகத்தியர் செந்தூரம்-300	சகலவித பாண்டு ரோகங்கள்.	100-200 மி. கி. தேன்; நெய் (அ பஞ்ச தீபாக்கினிச் சூரணத்துடன் இரு வேளைகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

	பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
44.	அயகாந்தச் செந்தூரம் நெ 2 இம்ப்காப்ஸ்	சகலவித பாண்டு ரோகங்களும், நீராம்பலும்.	100-200 மி.கி. தேன் (அ) நெய்யுடன் இரு வேளைகள்.
45.	அயவீரச் செந்தூரம் அகஸ்தியர் செந்தூரம் 300	சூலை, கீல்வாயு, வாதம், குஷ்டம், விஷக்கடி.	100-200 மி. கி. தேன் (அ) பனை வெல்லத்துடன் இரு வேளைகள்.
46.	சண்டமாருதச் செந்தூரம் சித்த வைத்தியத் திரட்டு	கீல்வாயு, பக்ஷவாதம், நடுக்கு வாதம், நரித்தலை வாதம், ஜன்னி, ஜுரம், மேகக்கிரந்தி, ஒட்டுரோகம்.	25-100 மி. கி. தேன், திரிகடுகுச் சூரணத்துடன் இரு வேளைகள்.
47.	கௌரிச் சிந்தாமணி அகஸ்தியர் வைத்திய காவியம் - 1500	சூலை, குன்மம், ஜுரம், எலிக்கடி, சுவாஸம், காஸம், பீனிசத் தலைவலி (100 மி.கி.. தேனில் கொடுக்க). மற்ற விவரங்களுக்கு சி.ம.செ. பார்க்க.	100-200 மி. கி. தேன், திரிகடுகுச் சூரணம் சேர்த்து இரு வேளைகள்.
48.	காடிக்காரச் செந்தூரம் சித்த வைத்தியத் திரட்டு	பக்ஷவாதம், வாதரோகம், வாந்திபேதி (காலரா), பேதி, சுரம்.	100-200 மி. கி. தேன் (அ) இஞ்சிச் சாறு (அ) துளசிச் சாறுடன் இரு வேளைகள்.
49.	காந்தச் செந்தூரம் சித்த வைத்தியத் திரட்டு	பாண்டு, சோகை, அண்டவாயு, நீராம்பல், கவிசைக்கட்டி, ஆனந்த வாயு.	200-400 மி. கி. வீதம் இரு வேளைகள் தேனுடன்.
50.	க்ஷயகுலாந்தகச் செந்தூரம் அகஸ்தியர்பின் எண்பது	க்ஷயம், காஸம், சுவாஸம், கபரோகங்கள்.	50-100 மி. கி. வீதம் தேனுடன் திரிகடுகுச் சூரணமும் சேர்த்து 10 நாட்கள்.
51.	பஞ்சாமிர்தச் செந்தூரம் சரபேந்திர வைத்திய ரத்னாவளி.	பெரும்பாடு, மூத்திர எரிவு, வெண்மேகம், பித்தமேகம், வெட்டை, சோகை.	1-2 அரிசி எடை நெய் (அ) வெண்ணெய்யுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

	பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
52.	இலிங்கச் செந்தூரம் நெ.1 போகர் வைத்தியம்-700	குளிர் ஜுரம், ஜுரம், வாதகப ரோகம், மேக ரோகம்.	50-100 மி. கி. தேனுடன் இரு வேளைகள்.
53.	இலிங்கச் செந்தூரம் நெ.2 சித்த வைத்தியத் திரட்டு	குளிர் ஜுரம், ஜுரம், வாதகப ரோகம், மேக ரோகம்.	50-100 மி. கி. தேன் (அ) மற்ற அனுபானங்களுடன் 2 வேளைகள்.
54.	உலோக மண்டூரம் தேரையர் யமக வெண்பா	சோபை, பாண்டு, காமாலை, மகோதரம், வாத பித்த நோய்கள், மந்த சுரம், முப்பிணி, அசீரணம், உப்புசம், விஷபாகம், உன்மத்தசன்னி.	100-200 மி. கி. நெய் (அ) தேனில் கொடுத்து நீர் முள்ளிக்கியாழம் கொடுக்கவும். இரு வேளைகளுக்கு.
55	மண்டூரச் செந்தூரம் அகஸ்தியர் ரத்தினச் சுருக்கம்.	விஷப்பாண்டு, காமாலை, பாண்டு, பித்த நோய், சேத்துமநோய், அரோசகம், அன்னத்துவேஷம், வாந்தி, விக்கல், வாய்வு, நீர்தோஷம், அசீரணம்.	100-200 மி. கி. தேன், திரிகடுகுச் சூரணம் சேர்த்து இரு வேளைகள்.
56.	நாகச் செந்தூரம் அகஸ்தியர் செந்தூரம் - 300	குன்மம், பெருவயிறு, மூலம், மேகம், மேகத்தடிப்பு, குஷ்டம், வெள்ளை, விந்து நஷ்டம், கவிசைக்கட்டி, கால் கை எரிவு.	100-200 மி.கி. திரிகடுகுச் சூரணத்துடன் தேன் (அ) நெய் சேர்த்து கொடுக்கவும்.
57.	படிகாரச் செந்தூரம் சித்த வைத்தியத் திரட்டு	சீதபேதி, பெரும்பாடு.	200-400 மி. கி. நெய் (அ) வெண்ணெய்யுடன் இரு வேளைகள்.
58.	படிகலிங்கம் சித்த வைத்தியத் திரட்டு	அதிசாரம், சீதபேதி, சூலை, பெரும்பாடு, ஊழிபேதி.	1/2 - 1 கிராம் நெய் (அ) வெண்ணெய்யுடன் இரு வேளைகள்.
59.	பூரணச்சந்திரோதயம் தேரையர் கரிசல் - 300	க்ஷயம், ஈளை, மலச்சிக்கல், கிராணி, காமாலை, கடுப்பு, குன்மம், ஜுரம், மேகசூலை, வெட்டை, சூலை, குடைச்சல், துன்மாங்கிஷம், எலிக்கடி.	100-200 மி. கி. தேன், கற்பூராதிச் சூரணம் (அ) வெற்றிலைச் சாற்றுடன் இரு வேளைகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும். அனுபானமும்
60. இரசச் செந்தூரம் சித்த வைத்தியத் திரட்டு	மேகநோய், நாட்பட்ட ஜுரங்கள், சருமநோய்கள் (தோல் நோய்கள்), மூலம், பவுத்திரம்	50-100 மி. கி. தேனுடன். புளி, புகை நீக்கவும்.
61. சுயமக்கினிச் செந்தூரம் சித்த வைத்தியத் திரட்டு	வாத குன்மம், மகோதரம், மூலம், கிராணி, அதிசாரம், புளித்த ஏப்பம், சன்னி, விதைவாதம், கவிசை.	100-200 மி. கி. வீதம் தேன், நெய், சீரகச் சூரணம் அல்லது சீந்தில் சூரணம் சேர்த்து இரு வேளைகள்.
62. தாளகச் செந்தூரம் இம்ப்காப்ஸ் மண்டைசூலை.	சுவாஸம், காஸம், வாதநோய், பிரமேகம், கண்ணோய், நீரடைப்பு, சூதகவாயு, நஞ்சுகள்.	50-100 மி. கி. (அ) தேனுடன் இரு வேளைகள்.
63. உப்புச் செந்தூரம் நெ.1 புலிப்பாணி-500	வாதகபகுன்மம் முதலான எண்வகை குன்மங்கள், அஜீரணம், சூலை, நெஞ்செரிவு, சூதகவாயு.	100-200 மி. கி. தேன் (அ) நீருடன் இரு வேளை கள்.
64. உப்புச் செந்தூரம் நெ.2 புலிப்பாணி-500	பித்த குன்மம், அசீரணம், விஷங்கள்	100-200 மி. கி. நீருடன் இரு வேளைகள்.
65. வெள்ளிச் செந்தூரம் தேரையர் யமகம்	பாண்டு, காமாலை, குன்மம், சூலை, க்ஷயம், சுரம், மதுமேகம், காளாஞ்சபடை, சந்நிபாதம், பிடிப்பு.	50-100 மி. கி. தகுந்த அனுபானத்துடன் இரு வேளைகள்.
66. ஜலமஞ்சரி யூகிகரிசல் - 151	நீராம்பல், பாண்டு, வீக்கம், சோகை, துன்மாங்கிஷம்.	200-100 மி. கி. வீதம் இளநீர், எலுமிச்சம் பழச்சாறு, வெந்நீர், கீழாநெல்லி (அ) கரிசாலைக் கியாழத்துடன் இருவேளைகள்.

பிரிவு 3 பற்பம் (ஆ : பஸ்ம; யு:- குஷ்த்)

67. ஆமை ஓடு பற்பம் இம்ப்காப்ஸ்	மாந்தம், கணம், குழந்தைகளின் மாந்த பேதி.	100 - 200 மி . கி . வீதம் தேன் (அ) முலைப்பாலுடன் இரு வேளைகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

	பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
68.	கந்தக பற்பம் அனுபோக வைத்திய நவ நீதம்-அப் துல்லா சாகிப்	சொறி, தேமல், மேகப்படை, குஷ்டம், மதுமேகம், பவுத்திரம்.	20-50 மி. கி. நெய் அல்லது வெண்ணெய்யுடன் இரு வேளைகள்.
69.	கருவங்க பற்பம் இம்ப்காப்ஸ்	நீரடைப்பு, ஜுரம், மூலம், பவுத்திரம், சரும ரோகங்கள், சூலெரிவு.	50 - 100 மி. கி. நெய் அல்லது வெண்ணெய்யுடன் 2 வேளைகள்.
70.	கல்நார் பற்பம் - தன்வந்தரி வைத்திய காவியம் - 1000	பித்தம், மூத்திர கிரிச்சரம், வெள்ளை, எரிச்சல்.	100-200 மி. கி. நெய் அல்லது வெண்ணெய்யுடன் இரு வேளைகள்.
71.	குங்கிலிய பற்பம் சித்த வைத்தியத் திரட்டு	வெள்ளை, நீர் எரிவு, நீர்க்கட்டு, பிரமேகம், வெட்டை, சீதபேதி.	200-500 மி. கி. வெண்ணெய், நெய் (அ) இளநீருடன் இருவேளைகள்.
72.	சுக்குவான் மருந்து சரபேந்திர வைத்திய ரத்னாவளி		சுக்குவான், 1/2 - 1 கிராம் தேனுடன் இரு வேளைகள்.
73.	முத்து பற்பம் இம்ப்காப்ஸ்	மாலைக்கண், உஷ்ணாதிக்கம், வலிப்பு, பித்தம், வாதநோய், மூலம், நாட்பட்டபேதி, உட்காய்ச்சல், வாந்தி, க்ஷயம், ஈளை, இருமல், இரத்த பித்தம்	50 - 100 மி. கி. தகுந்த அனுபானத்துடன் இரு வேளைகள்.
74.	முத்துச் சிப்பி பற்பம் சித்த வைத்தியத் திரட்டு & - இம்ப்காப்ஸ்	மூலம், பவுத்திரம், க்ஷயம், உஷ்ணம், காசம்.	200 - 400 மி. கி. நெய் அல்லது வெண்ணெய்யுடன் இரு வேளைகள்.
75.	நாக பற்பம் சித்த வைத்தியத் திரட்டு	மூலம், பவுத்திரம், க்ஷயம், அதிஸாரம், கிராணி, சீதபேதி, காசம், இளைப்பிருமல், ஈளை	100 - 200 மி. கி. நெய் அல்லது வெண்ணெய் (அ) தேத்தான் கொட்டை லேகியத்துடன் இரு வேளைகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
76. நண்டுக்கல் பற்பம் சித்த வைத்தியத் திரட்டு & கல்நண்டு சூத்திரம்-16	நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, நீர்க்கட்டு	200 - 4 00 மி. கி. நீர் முள்ளிக் கியாழம், சிறுபீளைச் சாறு, தண்ணீர், இளநீர் அல்லது முள்ளங்கிச் சாற்றுடன் இரு வேளைகள்.
77. நத்தை பற்பம் இம்ப்காப்ஸ்	இரத்தமூலம், சீதபேதி, ஆசனக்கடுப்பு.	200-400 மி. கி. வீதம் நெய் அல்லது வெண்ணெய்யுடன் இரு வேளைகள்.
78. படிகார பற்பம் பிரம்மமுனி கருக்கடை-300	வெட்டை, இரத்த மூத்திரம், நீரெரிவு, நீரடைப்பு, சதையடைப்பு, பெரும்பாடு, வாய்ப்புண்.	200 - 300 மி. கி. வீதம் நெய் அல்லது வெண்ணெய்யுடன் இரு வேளைகள்.
79. பலகரை பற்பம் தேரையர் கரிசல்-300	வெட்டை, மேகச்சூடு, நீர்க்கட்டு, குன்மம், விஷம்.	50 - 100 மி. கி. வீதம் நெய் அல்லது வெண்ணெய்யுடன் இரு வேளைகள்.
80. பஞ்சலவண பற்பம் தேரையர் கரிசல்-300 இரு வேளைகள்.	அஜீரணம், அதிசாரம், சூலை, குன்மம்.	100-200 மி. கி. வீதம் தண்ணீர், நெய் (அ) வெண்ணெய்யுடன்
81. பேரண்ட பற்பம் நெ.1 புலிப்பாணி-500	பைத்தியம், பிரமை, மூர்ச்சை, வலிப்பு, மயக்கம்.	100 - 300 மி. கி. கழுதைப் பால், இஞ்சிச் சாறு, சர்க்கரை சேர்த்து இரு வேளைகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
82. பேரண்ட பற்பம் நெ.2 புலிப்பாணி-500	பைத்தியம், பிரமை, மூர்ச்சை, வலிப்பு, மயக்கம்.	100 - 30 மி. கி. கழுதைப் பால், இஞ்சிச் சாறு, சர்க்கரை சேர்த்து இரு வேளைகள்.
83. பவள பற்பம் இம்ப்காப்ஸ்	இரத்தபித்தம், காசம், சுவாசம், இருமல், கிராணி, க்ஷயம், ஈளை, பேதி, சீதபேதி.	100 - 200 மி. கி. நெய், வெண்ணெய் (அ) பாலுடன் 2 வேளைகள்.
84. பவள பற்பம் (ஸ்பெஷல்) இம்ப்காப்ஸ்	காசம், ரத்தகாசம், மேகம், க்ஷயம், சூலை, மூலம், வெள்ளை, விந்து நஷ்டம்.	100 - 200 மி. கி. வெண்ணெய், நெய், தண்ணீர் (அ) பாலுடன் இரு வேளைகள்.
85. சங்கு பற்பம் சித்த வைத்தியத் திரட்டு	குன்மம், சூலை, சரும ரோகம், வயிற்றுக் கோளாறுகள், கண் புகைச்சல்.	100-200 மி. கி. வீதம் பால், நெய் (அ) வெண்ணெய்யுடன் இரு வேளைகள்.
86. சிலாசத்து பற்பம் சித்த வைத்தியத் திரட்டு	மூத்திர எரிவு, வெள்ளை, நீர்க்கட்டு, பித்த வியாதிகள், நீர்க்கடுப்பு, உடலெரிச்சல்.	1/2 - 1 கிராம் வெண்ணெய் (அ) நெய்யுடன் 2 வேளைகள்.
87. சிருங்கி பற்பம் சித்த வைத்தியத் திரட்டு	சுணை, இருமல், மார்புவலி, அம்மை, எலும்புருக்கி, இதய நோய்கள், பித்த நோய்கள்.	200 - 40 0 மி. கி. நெய் அல்லது வெண்ணெய்யுடன் 2 வேளைகள்.
88. தாளக பற்பம் அகஸ்தியர் பரிபூரணம்-400, & சித்தவைத்தியத் திரட்டு	பித்த வெட்டை, பித்த ஜுரம், பித்த காசம், பித்த க்ஷயம், ஈளை, வலிப்பு, மேகம், பித்தம், மந்தாரகாசம்.	25 - 50 மி. கி. பனைவெல்லம், நெய் (அ) தேனுடன் இரு வேளைகள். உப்பில்லாப் பத்தியம். தொடர்ந்து 12 நாட்களுக்கு மேல் உட்கொள்ளக்கூடாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும். அனுபானமும்
89. தாமிர பற்பம் சித்த வைத்தியத் திரட்டு & இம்ப்காப்ஸ்	கபரோகம், க்ஷயம், பித்தரோகம், சருமரோகம், மேகரோகம், சன்னிபாதம்.	50-100 மி. கி. தகுந்த அனுபானத்துடன் இரு வேளைகள். குமட்டல், வாந்தி ஏற்பட்டால் மருந்தை நிறுத்திவிட்டு எலுமிச்சைச் சாறு, சுக்குக் கியாழம் கொடுக்கவும்.
90. தங்க பற்பம் சித்த வைத்தியத் திரட்டு & இம்ப்காப்ஸ்	க்ஷயம், காசம், காய்ச்சல், காங்கை, சோபை, பாண்டு, நரம்புத் தளர்ச்சி, மேகநோய்கள், முப்பிணிகள், புண், பிடிப்பு. காம இச்சை உண்டாக்கி.	100-200 மி. கி. தேன், வெண்ணெய் அல்லது பாலுடன் இரு வேளைகள்.
91. வங்க பற்பம் சித்த வைத்தியத் திரட்டு	வெட்டை, மூலம், பவுத்திரம், நீர்மேகம்.	100-200 மி. கி. நெய், வெண்ணெய் அல்லது தேனுடன் இரு வேளைகள்.
92. வெங்கார பற்பம் சித்த வைத்தியத் திரட்டு	வெள்ளை, மூத்திர கிரிச்சரம், நீரடைப்பு, சதையடைப்பு, நீர்க்கட்டு.	2 00 - 300 மி. கி. நெய், வெண்ணெய் (அ) இளநீருடன் இரு வேளைகள்.
93. வெள்ளி பற்பம் இம்ப்காப்ஸ்	காசம், ரத்தகாசம், மேகம், க்ஷயம், மந்தாரகாசம், சூலை, மூலம், வெள்ளை, விந்து நஷ்டம்.	100-200 மி. கி. வெண்ணெய்யுடன் இரு வேளைகள்.

பிரிவு - 4 சுண்ணம்

94. வெடியுப்புச் சுண்ணம் இம்ப்காப்ஸ்	நீரெரிவு, நீரடைப்பு, மூத்திரக்கட்டு, வீக்கம் முதலியன.	100 - 00 மி. கி. நீர் முள்ளிக் கியாழம், இள நீர் அல்லது முள்ளங்கிச் சாற்றுடன் இரு வேளைகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரிவு - 5 பதங்கம் (ஆ:- பதங்க யு:- ஜௌஹர்).

	பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அநுபானமும்
95.	பறங்கிப்பட்டை பதங்கம் புலிப்பாணி வைத்தியம்-500	மேகம், சூலை, கருங்கிரந்தி, கைக்கருப்பு, வெள்ளை, கீல்பிடிப்பு, விரணம், குஷ்டம், வாய்நாற்றம், பல்சூலை.	100-200 மி.கி. பனை வெல்லத்துடன்.
96.	திருமூர்த்திப் பதங்கம் சித்த வைத்தியத் திரட்டு	பக்ஷவாதம், கண்டமாலை, அரையாப்பு.	20-50 மி. கி. காலை ஒரு வேளை பனைவெல்லம் அல்லது ஒரு தேக்கரண்டி ஆமணக்கு எண்ணெய்யுடன்

பிரிவு - 6 மெழுகு, குழம்பு & மை

97.	அகஸ்தியர் குழம்பு சித்த வைத்தியத் திரட்டு	ஜுரம், இருமல், குளிர் ஜுரம், சூதகவாயு, ரத்த மூலம், பாண்டு, நீராம்பல், சோகை, ஜன்னி, குன்மம், கிரந்தி, கல்லடைப்பு, பிளவை, தொடை வாழை, அரையாப்பு, சிலந்தி, ஸ்தனவிப்புருதி, புண், சன்னிவாதம், பறங்கிப்புண், கபாலவலி, கடிவிஷம், பிரமை, மலடு.	100-200 மி. கி. தக்க அநுபானம், பால்சாதம் உண்க. உப்பு, புளி நீக்குக. ஒரே தடவையில் மூன்று நாட்களுக்கு மேல் உபயோகிக்க வேண்டாம்.
98.	குன்மகுடோரி	குன்மம், பித்தவாயு, அஜீரணம், சூதக வாயு.	1-2 கிராம் தண்ணீருடன் இரு வேளைகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
99. கெந்தி மெழுகு சித்த வைத்தியத் திரட்டு	வெகுமூத்திரம் போன்ற மேகநீர் நோய்கள், சொறி, சிரங்கு, குஷ்டம், மூலம்.	1/2 - 1 கி. பாலுடன் உப்பில்லாப் பத்தியம் இரு வேளைகள்.
100. இடிவல்லாதி புலிப்பாணி வைத்தியம்-500	வாதம், விரணம், குஷ்டம், குன்மம், மேகம், படை, சீலைப்புண், கருமேகம், சூதக சூலை, கிரந்தி, சூலை, வெள்ளை, அரையாப்பு, அக்கினி வாய்வு.	1 - 2 கி. பனை வெல்லத்துடன் தினமும் இரு வேளைகள்.
101. ஜாதிஜம்பீரக் குழம்பு சித்த வைத்தியத் திரட்டு	பித்தம், வாந்தி, விக்கல், தாகம், பாண்டு, மந்தபேதி, மூர்ச்சை, வெப்பு, உடல் வெளுத்து சில்லிடுதல்.	100 - 200 மி . கி. வரை 3 - 4 தடவைகள்.
102. கௌசிகர் குழம்பு சித்த வைத்தியத் திரட்டு	ஜுரம், ஜன்னி, ஈளை, இருமல், குளிர் ஜுரம், உட்ஜுரம், நடுக்கம், சன்னி, இருமல், வாந்தி, உளமாந்தை, பக்க சூலை, குடல்வலி, சூலை, குன்மம், குஷ்டம், உஷ்ணவாயு, சூதகவாயு, இரத்த மூலம், சீழ் மூலம், சுவாசம், பிளவை, புற்று, பீனிசம், கபால சூலை, வாதம், எலிக்கடி, பாம்புக்கடி அட்சரம், வெள்ளை தோஷம்.	100 - 200 மி . கி : தக்க அனுபானத்துடன்.
103. கும்மட்டி மெழுகு அகஸ்தியர் வைத்தியக்காவியம்	குன்மம், மகோதரம்,கல்லீரல், மண்ணீரல் பெருத்தல், சூதகவாயு, பாண்டு, விஷபாகம், நீராமை, வெப்புப்பாவை, கவிசைக்கட்டி	200 - 500 மி.கி . பனை வெல்லத்துடன் காலை ஒரு வேளை மட்டும் 3 - 5 நாட்களுக்கு.
104. மகாவீர மெழுகு சித்த வைத்தியத் திரட்டு	மார்பு நோய் , வலிப்பு, முகவாதம், ஜன்னி, உதறுவாதம், சூதகசூலை, குஷ்டம், அரையாப்பு, கொருக்குப் புண், வாத நோய், மேக நோய்.	100 - 200 மி. கி. பனை வெல்லத்துடன் இரு வேளைகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
105. நந்தி மெழுகு சித்த வைத்தியத் திரட்டு	வண்டுக்கடி, சூலை, குன்மம், கரப்பான், புற்று, விப்புருதி, கண்ட மாலை, கபால குஷ்டம், கிரந்தி, மூத்திரகிரிச்சரம், விஷக்கடி, மேகம், எலிக்கடி, மூலம், பிளவை, வாத நோய்கள், தோல் நோய்கள், பாரிச வாயு.	நோயின் தரத்திற்கு ஏற்ப 200 - 5 00 மி. கி. பனை வெல்லத்துடன் 12 - 25 - 37 - 45 நாட்களுக்கு
106. நவவுப்பு மெழுகு சித்த வைத்தியத் திரட்டு	வாதகுன்மம், நீர்க்கோவை, உதர வாயு, அண்ட வாதம், முடக்கு வாதம், சூதக வாயு, பாரிச வாயு, மகோதரம், வயிற்றுவலி, நரம்புக்கோளாறுகள்.	100-200 மி.கி. பனை வெல்லத்துடன் காலை ஒரு வேளை மட்டும்.
107. நீலாஞ்சனமை சித்த வைத்தியத் திரட்டு	நயன ரோகம் (பூ, படலம், முத்துக்காசம், பில்லம்).	காலை ஒரு வேளை மட்டும் கலிக்கமாகக் கண்ணில் தீட்டவும்.
108. பஞ்சசூத மெழுகு யூகி. கரிசல்-151 வலிப்புகள், நாசிகா பீடம்.	ஜன்னிதோஷம், இசிவு, ஜுரம், குன்மம், வாயு, குண்டலவாயு, பக்க வாதம், மார்பு நோய், (அ) தக்க அனுபானத்துடன்.	100-200 மி. கி. தினம் இரு வேளைகள் பனை வெல்லத்துடன்
109. வான் மெழுகு யூகி கரிசல்-151	கபவாத ஜன்னி, சுரம், காசம், ஈளை, குஷ்டம், குன்மம், சூதகவலி, மகோதரம், கண்டமாலை, சூலை, பக்ஷவாதம், நீரிழிவு, குடலண்டவாதம், மஞ்சட் காமாலை, மந்தாரகாசம்.	100-200 மி. கி. பனை வெல்லம் அல்லது தக்க அனுபானத்துடன்.
110. விஷக் குழம்பு சித்த வைத்தியத் திரட்டு	சகல விஷங்களுக்கும்	200-400 மி. கி. தண்ணீருடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
111. இரசமெழுகு அகஸ்தியர் பரிபூரணம்-400	மேக வெள்ளை, மேகத் தடிப்பு, மேகப்புண், மேகசூலை, கிரந்தி, கீல்வாதம், இரத்தவெள்ளை, அரையாப்பு.	100 - 200 மி. கி. பனை வெல்லத்துடன் 3-5 நாட்கள் இரு வேளைகள்.
112. இரசகெந்தி மெழுகு புலிப்பாணி-500	வாதரோகம், மேகம், சொரி, குஷ்டம், விரணம், சிலைப்புண், பவுத்திரம், மூலம், புழுவெட்டு, கிரந்தி, புற்று முதலியன. (மற்ற விவரங்களுக்கு சி.ம.செ. மு. யைப் பார்க்கவும்.)	1/2 -1 மி. கி. பனை வெல்லத்துடன் தினம் இருவேளைகள். தயிர்ச்சாதம் உண்டபின்.

பிரிவு - 7 சூரணம் (ஆ : சூர்ண, யு: ஸபூஃப்)

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
113. அமுக்கராச் சூரணம் & மாத்திரை (500 மி.கிராம்) தேரையர் கரிசல்-300 குத்து வாய்வு.	குன்மம், மேக வெட்டை, வெள்ளை, விக்கல், பாண்டு, தாதுக்ஷீணம், ஜ்வரம், காங்கை, கைகால் எரிவு, கபம், இரைப்பு, விந்து நஷ்டம், ஈரல் நோய்.	1-3 கி. தேன் (அ) வெந்நீருடன் இரு வேளைகள்.
114. இம்பூரல் மாத்திரை (500 மி.கிராம்) இம்ப்காப்ஸ்	இரத்த வாந்தி, இரத்த பித்தம், இரத்த காசம்.	2-3 மாத்திரை வீதம் பாலுடன் மூன்று வேளைகள்.
115. சுண்டைவற்றல் சூரணம் தேரையர் கரிசல்-300	அக்கினி மந்தம், பேதி, மூலம், பொருமல், இரைச்சல், கிராணி.	1-2 கி. எருமைத் தயிருடன் இரு வேளைகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
116. திராக்ஷாதிச் சூரணம் & மாத்திரை (500 மி.கி.) தேரையர் கரிசல்-300	பொருமல், காச சுவாசம், குன்மம், தாதுக்ஷீணம், பிரமேகம், வயிற்று நோய், அரோசகம், வாந்தி, பைத்தியம், மயக்கம், பாண்டு, பித்தபாண்டு, இருமல், ஜுரம், இளைப்பு, உழலை, வெள்ளை, சன்னி, தியக்கம், பித்தம், நளிர் எரிவு, சுரத்துடன் கூடிய என்புருக்கி.	1 - 2 கிராம் தேனுடன் இரு வேளைகள்.
117. ஏலாதிச் சூரணம் & மாத்திரை (500 மி.கி.) அகஸ்தியர் ரத்தினச் சுருக்கம்	வாத பித்த ரோகம், கிரந்தி, விரணம், சில்விஷம், குஷ்டம், பெரும்பாடு, எலும்புருக்கி, பித்தவாயு, சொறி, சிரங்கு, குறை நோய், ஊறல், அரிகிரந்தி,	1 - 3 கிராம் தேன், பால் (அ) நீருடன் இரு வேளைகள்.
118. இஞ்சிச் சூரணம் சித்த வைத்தியத் திரட்டு	வாந்தி, அக்கினிமந்தம், அஜீரணம், பக்க வாயு, சூலை எரிவு, வாய்வு, கோழை, சூதக வாயு.	1 - 2 கிராம் தண்ணீருடன் இரு வேளைகள்.
119. சீரகச் சூரணம் புலிப்பாணி 500	வாந்தி, அக்கினிமந்தம், அஜீரணம், மயக்கம், பித்த நோய்கள், வெப்பம், காங்கை.	1 - 2 கிராம் தண்ணீருடன் இரு வேளைகள்.
120. மயிலிறகாதிச் சூரணம் சித்த வைத்தியத் திரட்டு & தேரையர்-1001	விக்கல், வாந்தி.	1 - 2 கிராம் தேனுடன் அடிக்கடி கொடுக்கவும்.
121. நிலாவரைச் சூரணம் அகஸ்தியர் ரத்தினச் சுருக்கம்	வாயு, பொருமல், விம்மல், விக்கல், வாந்தி, மலக் கட்டு, பித்தம், சுவாசகாசம், கபநோய், உடம்பெரிவு.	2 - 3 கி. வெந்நீருடன் இரு வேளைகள்.
122. பஞ்சதீபாக்கினிச் சூரணம் & மாத்திரை (500 மி.கி) அகஸ்தியர் ரத்தினச் சுருக்கம்	வாயு, பித்தம், கபம், அதிக உஷ்ணம், சூலை, பொருமல், பித்தவாயு, மூலவாயு, பசியின்மை, மயக்கம், கிறுகிறுப்பு, என்புசுரம் (அஸ்திசுரம்), என்புவெட்டை (அஸ்தி வெட்டை), அஜீரணம்.	1 - 2 கி. வீதம் 2 - 3 வேளைகளுக்கு நெய் (அ) தேனுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
123. பறங்கிப்பட்டைச் சூரணம் & மாத்திரை (500 மி.கி) சித்த வைத்தியத் திரட்டு	மேகம், வெண்குஷ்டம், கருங்குஷ்டம். உடலுக்கு நல்ல நிறமும் பசியும் உண்டாகும்.	1 1/2 - 3 கி. வீதம் சர்க்கரையும், பாலும் சேர்த்து இரு வேளைகள்.
124. சீந்தில் சூரணம் அகஸ்தியர் வைத்தியக் காவியம் - 1500 .	மேகம், ஈளை, காசம், க்ஷயம், அண்ட வாயு, வாதம், நாசிப்புண், பீனசம், புழுவெட்டு. (மற்றவைகளுக்கு சி.ம.செ.மு. பார்க்கவும்)	1 - 3 கிராம் தக்க அனுபானத்துடன் (நெய், தேன், சர்க்கரை)
125. சிவதைச் சூரணம் சித்த வைத்தியத் திரட்டு	மலக்கட்டு, வெப்பு, வாயு, வாத நோய்கள்	3 - 6 கிராம் தேன் (அ) சர்க்கரையுடன் இரு வேளைகள்.
126. தாளீசாதிச் சூரணம் & மாத்திரை ; அகஸ்தியர் ரத்தினச் சுருக்கம்.	வயிற்றெரிச்சல், சூலை, அஸ்திஜுரம், தாகம், பொருமல், அஜீரணம், (மற்றவைகளுக்கு சி.ம.செ.மு பார்க்கவும்)	1 1/2 கிராம் தேனுடன் இரு வேளைகள்.
127. துயிர்ச்சுண்டிச் சூரணம் சித்த வைத்தியத் திரட்டு	நாட்பட்ட கிராணி, சுரம், அதிசாரம், அஜீரண பேதி, வாந்தி.	2 - 3 கிராம் வெந்நீருடன் இரு வேளைகள்.
128. திரிகடுச் சூரணம் இம்ப்காப்ஸ்	திரிதோஷம், பசியின்மை, செரியாமை, வயிற்றுப் பொருமல், செரியாமையால் ஏற்படும் வயிற்று வலி, இருமல், சுரம், முறைசுரம், மற்ற மருந்துகளுக்கு அனுபானமாக, மூக்கில் நசியமிட மயக்கமும் கிறுகிறுப்பும் தீரும்	1 - 2 கிராம் தேன், சர்க்கரை, நெய் அல்லது நீருடன் 2 - 3 வேளைகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
129. திரிபலைச் சூர்ணம் இம்ப்காப்ஸ்	மலச்சிக்கல், இருமல், வாய்ப்புண், நீரும் பீளையும் வடியும் கண்ணோய். கஷாயம் புண், இரணங்களைக் கழுவவும், வாய்ப்புண்ணில் கொப்பளிக்கவும், கண்ணோயில் கண்ணைக் கழுவவும் பயனாகிறது. மற்ற மருந்துகளின் அனுபானமாகவும் பயனாகிறது.	1-2 கிராம், தேன், நெய் (அ) நீருடன் இரு வேளைகள்.
130. வல்லாரை மாத்திரை (500 மி.கி.) -இம்ப்காப்ஸ்	பலக்குறைவு, புஷ்டிக்குறைவு, மூளை, குரல், இதயம் இவைகளுக்கு இதமானது.	2-4 மாத்திரை வீதம் இரு வேளைகளுக்கு நீருடன்.

பிரிவு - 8 இலேகியம் (அ) இளகம் (ஆ: லேஹ்ய:- மாஜூன்)

131. இம்பூரல் லேகியம் சித்த வைத்தியத் திரட்டு.	இரத்த பித்தம், இருமல், இரத்த வாந்தி, இரைப்பிருமல், இரத்தக்கழிச்சல், க்ஷயம்.	6 - 12 கிராம் வீதம் இரு வேளைகள்.
132. இஞ்சி லேகியம் சித்த வைத்தியத் திரட்டு	வாயு, பித்தம், அரோசகம், குன்மம், ருசியின்மை, பொருமல், சூலை, வலிப்பு, வாந்தி, அஜீரணம்.	6 - 12 கி. வீதம் தினமும இரு வேளைகள்.
133. கரிசாலை லேகியம் அகஸ்தியர் ரத்தினச் சுருக்கம்	நாட்பட்ட பாண்டு, வாதபாண்டு, பித்த வெட்டை, உட்காய்ச்சல், மயக்கம், சோபை, கிராணி, சகல மூலங்கள், கைகால் ஓய்ச்சல், எரிவு, வாந்தி, பேதி, நீர்ச்சுரப்பு, ஊண்வெறுப்பு. ,மஞ்சட்காமாலைக்கு சிறந்ததொரு மருந்து.	3 - 6 கிராம் வீதம் தினமும் வேளைகள்.
134. கருணை லேகியம் கண்ணுசாமிப் பிள்ளையின் பதார்த்த குண விளக்கம்.	சகல மூலங்களுக்கும் நல்லதொரு மருந்து.	6 - 12 கிராம் வீதம் தினமும் இரண்டு வேளைகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
135. கேசரி லேகியம் யூகி சுரிசல் - 151	பித்தம், வாந்தி, மயக்கம், அரோசகம், அக்கினி மாந்தியம், கண் காலெரிச்சல், சோபை, கிராணி.	3 - 6 கிராம் வீதம் தினமும் இரு வேளைகள்.
136. மகாவல்லாதி லேகியம் வல்லாதி-600	மேகம், கிரந்தி, அரையாப்பு, சூலை, குட்டம், வாயு, வெள்ளை, கைகால் முடக்கு, வெடி கரப்பான், பிளவை, புற்று, சொறி சிரங்கு, அஸ்தி சுரம், அஸ்தி வெட்டை, மூலவாயு, உஷ்ண வாயு, பௌத்திரம், சகல விஷங்கள், பக்க வாதம், ஆமவாதம்.	3 கிராம் வீதம் இரு வேளைகளுக்கு 40 நாட்களுக்கு.
137. நாரத்தை லேகியம் இம்ப்காப்ஸ்	பித்த குன்மம், தாபஜ்வரம், வாந்தி, அக்கினிமாந்தியம், அரோசகம், மயக்கம், நெஞ்செரிவு, மலக்கட்டு, நீர்க்கட்டு, நீர்த்தாரை எரிச்சல் முதலியன.	3 - 6 கிராம் வீதம் இரு வேளைகள் 40 நாட்களுக்கு.
138. சரபுங்கவில்வாதி லேகியம் அகஸ்தியர் ரத்தினச் சுருக்கம்	க்ஷயம், பித்தவெட்டை, பித்த பாண்டு, பித்தம், அக்னிமாந்தியம், சூலை, தோல் நோய்கள், குன்மம், வெள்ளோக்காளம், கைகால் எரிச்சல், கிராணி.	6 - 12 கிராம் வீதம் தினம் இரு வேளைகள். புளிப்பு உப்பு நீக்குக.
139. தேத்தான் கொட்டை லேகியம் - அகஸ்தியர் பரிபூரணம் 400	மூலம், பவுத்திரம், க்ஷீணரோகம், வெள்ளை, வெட்டை, வாய்வு, என்புசுரம் (அஸ்திசுரம்), பசிமந்தம். இதனுடன் நாகபற்பம் 100-200 மி.கி. சேர்த்து இரண்டு நாட்கள் கொடுக்க இரத்த மூலம் தீரும்.	3 - 6 கிராம் வீதம் தினமும் இரண்டு வேளைகள்.
140. வெண்பூசணி லேகியம் அகஸ்தியர் ரத்தினச் சுருக்கம்	காமாலை, சோபை, அஸ்திவெட்டை, அஸ்திசுரம், வெள்ளை, நீர்ச்சுருக்கு தீர்ந்து உடல் வலுத்து ஆண்மை பெருகும். நல்லதொரு காமம் பெருக்கி.	6 - 12 கிராம் வீதம் தினம் இரு வேளைகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்

பிரிவு - 9 இரசாயனம் (ஆ: ரஸாயன)

141. கந்தக ரசாயனம் சித்த வைத்தியத் திரட்டு	மேக நோய்கள், மேக நீர், வெள்ளை, சருமநோய், குட்டம், வெண்குட்டம், பூச்சிக்கடி முதலியன.	6 - 12 கிராம் வீதம் தினம் இரு வேளைகள்.
142. இஞ்சி ரசாயனம் சித்த வைத்தியத் திரட்டு	வாந்தி, உடல் எரிவு, மந்தம், அஜீரணம், அனல், பித்த நோய்கள், நெஞ்செரிச்சல், வயிற்றெரிச்சல்.	3 - 6 கிராம் வீதம் தினம் இரு வேளைகள்.
143. பரங்கி ரசாயனம் அகஸ்தியர் ரத்தினச் சுருக்கம்	மார்புநோய், பறங்கிப்புண், மேகம், மேகப்புண் கிரந்தி, கண்ட மாலை, சூலை, லிங்கப் புற்று, யோனிப் புற்று, சரும நோய், வெள்ளை, வெட்டை, வாய்வு, வளி, கபநோய், பிரமியம் என்கிற பிரமேகம்.	3 - 6 கிராம் வீதம் தினம் இரு வேளைகள் நாற்பது நாட்களுக்கு.
144. திப்பிலி ரசாயனம் அகஸ்தியர் ரத்தினச் சுருக்கம்	காசம், மந்தாரகாசம், க்ஷயம், இளைப்பு, இருமல், இரைப்பிருமல், கபநோய்கள், கக்கல்.	3 - 6 கிராம் வீதம் 100 மி.கி. தாமிரச் செந்தூரத்துடன் இரு வேளைகள் வீதம் 45 நாட்களுக்கு.

பிரிவு - 10 வடகம் (ஆ: வடீ யு :- பனடிக்)

145. இஞ்சி வடகம் (1 கிராம் மாத்திரை) சித்த வைத்திய திரட்டு & தேரையர்தரு	வல்லை நோய், அஜீரணம், மந்தம், உடல்நலிவு, முப்பிணி.	தினம் ஒரு மாத்திரை வீதம் இரண்டு (அ) மூன்று வேளைகள் தண்ணீருடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும். அனுபானமும்
146. தாளீசாதி வடகம் (500 மி.கி. மாத்திரை) சித்த வைத்தியத் திரட்டு தேரையர் பாடல் திரட்டு	கிராணி, அதிசாரம், வயிற்றிரைச்சல், அலசம், பக்கநோய் (எ) பக்கசூலை, வாந்தி, பசியின்மை, அசீரணம், இருமல், ஜலதோஷம், வாதம், கபம்.	ஒரு மாத்திரை வீதம் 2 - 3 வேளைகள் வாயில் அடக்கிக் கொள்ளவும்.
147. பாவனக் கடுக்காய் (500 மி.கி. மாத்திரை) வைத்திய சிந்தாமணி	இருமல், மந்தம், வயிற்றுவலி, வாந்தி, அஜீரணம். மற்ற விவரங்களுக்கு சி. ம. செ. மு. பார்க்கவும்.	ஒரு மாத்திரை வீதம் உணவுக்கு முன்னும் பின்னும்.

பிரிவு -11 தைலம் (ஆ : தைல யு: ரோகன்)

148. அண்டத் தைலம் இம்ப்காப்ஸ்	மாந்தம், ஜன்னி, குழந்தைகளுக்கு உண்டாகும் வலிப்பு, நாக்கு பாரிச வாயு. (நாக்கில் மேலே தடவிடுக).	1-4 துளிகள் இரு வேளைகள் முலைப்பாலுடன் அல்லது பசும்பாலுடன்.
149. அரக்குத் தைலம் தேரையர் தைல வர்க்கம்	ஜுரம், தாதுஜுரம், உடல் கடுப்பு, சந்திரா வர்த்தம், சூரியாவர்த்தம் கபாலசூலை, சுவாசகாசம், சுற்றாழை நாற்றம், பல்வேர் வீக்கம், குரல்கம்மல், உழலை, இரத்தக் கெடுதி, பாண்டு, நளிர்ச்சுரம், நாட்பட்ட காய்ச்சல்.	தலைக்கும், உடலுக்கும் தேய்க்க.
150. சிரட்டைத் லைம் இம்ப்காப்ஸ்	சொறி, படை, நாட்பட்ட தோல் நோய்கள்.	சம அளவு தேங்காய் எண்ணெய்யுடன் மேலே தடவவும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
151. சுக்குத் தைலம் தேரையர் தைல வர்க்கம்	ஆமவாதம், ஆவர்த்தவாதம், பீனிசம், தலைவலி, பல்வலி, காதுவலி, குரல்கம்மல், கோழை, தொண்டைக்கட்டு.	ஸ்நானம் செய்ய, நசியமிட, தொப்பளிக்க.
152. சித்திரமூலத் தைலம் சித்த வைத்தியத் திரட்டு	மண்டையிடி, மண்டைக்குத்து போன்ற சகலவித தலைவலிகள்.	ஸ்நானம் செய்ய.
153. சிரோபாரநிவாரணித் தைலம் - இம்ப்காப்ஸ்	தீராத தலைவலி, ஒற்றைத் தலைவலி, சந்திரா வர்த்தம் (படுஞாயிறு), சூரியாவர்த்தம் (எழுஞாயிறு)	ஸ்நானம் செய்ய.
154. சந்தகச் சுடர்த் தைலம் அகஸ்தியர் பரிபூரணம்-400	தொழுநோய், வெண்குட்டம், மேகப்புண், கருமேகம், வெள்ளை, என்புருக்கி, வாத ரோகம், படை, சொறி, புண், வாயு, குன்மம்.	1 - 4 துளிகள் சர்க்கரையுடன், இரு வேளைகள்.
155. கருடன் கிழங்கு எண்ணெய் - சித்த வைத்தியத் திரட்டு	கிரந்தி, குஷ்டம், கருமேகம், வெள்ளை, வெட்டை, அரையாப்பு, விஷம், புழுவெட்டு, மலக்கட்டு, வயிற்று உப்புசம், மேகப்புண், மேகஊறல், வெப்பு, வயிற்றிரைச்சல், உள்புண்கள்.	8 - 15 மி. லி. காலை ஒரு வேளை மூன்று நாட்களுக்கு. உப்பு, புளி மூன்று நாட்கள் நீக்கி மறு பத்தியமாக மூன்று நாட்களுக்கு உப்பு, புளி வறுத்து சேர்க்கவும்.
156. கரப்பான் தைலம் தேரையர் தைலவர்க்கம்	கரப்பான், சிரங்கு, படை, சொறி, சொப்பளம்.	உள்ளுக்கு 2-5 துளிகள் காலையில் பாலுடன். மேலுக்குத் தடவவும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
157. கழற்சித் தைலம் தேரையர் தைலவர்க்கம்	அண்டவீக்கம், உடல் வீக்கம், குடல் அடைப்பு.	8 - 15 மி. லி. காலையில் மட்டும். உப்பில்லாப் பத்தியம். பழையப் புளி, அவரைப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு உபயோகிக்கலாம்.
158. குந்திரிகத் தைலம் இம்ப்காப்ஸ்	காதவலி, வீக்கம், வேக்காடு, சிராய்ப்பு, ஊமைக்காயம்.	மேலே தேய்க்க.
159. கையான் தைலம் தேரையர் தைலவர்க்கம்	காசம், சுவாசம், மூச்சுத் திணறல், சளியுடன் கூடிய இருமல்.	1/2 -1 தேக்கரண்டி இரு வேளைகளுக்கு உள்ளுக்கு, ஸ்நானத்திற்கும் பயனாகும்.
160. மத்தான் தைலம் இம்ப்காப்ஸ்	படை, சொறி, சிரங்கு, துஷ்ட விரணம், ஊன் வளருதல், ஒழுகும் விரணங்கள், கசியும் படை, பிளவை, காது புண்ணில் சீழ் வடிதல்.	மேலுக்குப் பூசவும், சீழ் வடியும் காதில் போடவும் பயனாகிறது.
161. மலைவேம்பாதித் தைலம் தேரையர் தைலவர்க்கம்	மாதாந்திர பூப்புகால (ருது) ரத்தத்தை வெளிப் படுத்தாத ரத்த குன்மம், மலடு, பெரும்பாடு. (பருவத்திற்கு வராத பெண்ணுக்கும், பேரிளம் பெண்ணுக்கும் கொடுக்கக் கூடாது)	15 - 30 மி. லி. நீர் ஆகாரத்துடன் உப்பு நீக்கவும். வீட்டு விலக்கின் போது காலையில் ஒரு வேளை வீதம் மூன்று நாட்கள் மட்டும் கொடுக்கவும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும
162. மாந்த எண்ணெய் நெ.1 தேரையர் தைலவர்க்கம்	குழந்தைகளின் சகல மாந்தமும் சுடரோகங்களும், அதன் விளைவான மூச்சுத்திணறலும், வலிப்பும்.	8 மி. லி. முலைப்பாலுடன் காலையில் மட்டும்.
163. மாந்த எண்ணெய் நெ.2 இம்ப்காப்ஸ்	மாந்தம், ஜுரம், கபத்தினால் நாக்கு வெளுத்தல், பொருமும் மாந்தம், நளிர்சுர மாந்தம் முதலிய எண்வகை மாந்தங்கள்.	8 - 15 மி. லி. முலைப் பாலுடன் காலையில் மட்டும்.
164. மிளகாய்த் தைலம் புலிப்பாணி வைத்தியம் - 500	திமிர்வாதம், சோபை, மண்டைக்குத்து, உடல்வலி, சூலை, காதடைப்பு, காது குத்து, சொறி, சிரங்கு, படை, சூலை, நீர்ச்செரிப்பு.	வெளி உபயோகத்திற்கு மற்றும் தலைமுழுக.
165. மூல குடாரத் தைலம் இம்ப்காப்ஸ்	மூலம், இரத்தமூலம், மலக்கட்டு.	1-2 தேக்கரண்டி வீதம் இரவில் படுக்கும் முன்.
166. மெருகுள்ளித் தைலம் தேரையர் தைலவர்க்கம்	ஆமவாதம், கீல்வாயு, மேகம், வாதவீக்கம், பழைய விரணங்கள்.	8 - 15 மி. லி. காலையில் ஒரு வேளை. உப்பில்லாப் பத்தியம். புளி நீக்கவும்.
167 மேகநாதத் தைலம் சித்த வைத்தியத் திரட்டு	வெட்டை, வெள்ளை, மேகம், சூலை, தோல், நோய்கள், வாதநோய்கள், பித்த குன்மம், கீல்வாயு, குட்டம், கிரந்தி.	1/2 1 தேக்கரண்டி காலையில் மட்டும்.
168. மேனித் தைலம் இம்ப்காப்ஸ்	குடல் கிருமிகள், பவுத்திரம்.	1-2 தேக்கரண்டி வீதம் இரு வேளைகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும். அனுபானமும்
169. மயனத் தைலம் தேரையர் தைல வர்க்கம்	நரித்தலை வாதம், அண்டவாதம், பாரிச வாதம். வலி, சன்னிவாதம், கீல்வாயு, எலும்பு தசை நரம்புகளில் ஏற்படும் வாயு, சன்னி பாதம், குழந்தைகளின் இசிவு, வீக்கங்கள், ரத்தம் வழியும் வெட்டுக் காயம், விதை வீக்கம், ஆண் குறித்தளர்ச்சி, பெண் குறித் தளர்ச்சி, கை கால் சோர்வு, நரம்புத் தளர்ச்சி.	மேலே தேய்க்க, பட்டி கட்ட
170. நொச்சித் தைலம் தேரையர் தைல வர்க்கம்	காசம், சுவாசம், க்ஷயம், உடல்வலி.	ஸ்நானம் செய்ய; பிடித்தைலமாக. 1/2 -1 தேக்கரண்டி விதம் வெந்நீருடன் 2 வேளைகள் உள்ளுக்கு கொடுக்க.
171. நாசிரோகநாசத் தைலம் தேரையர் தைல வர்க்கம்	இரத்த பீநசம், பக்குகட்டும் பீநசம், நாட்பட்ட பீநசம், சுவாசத்தைத் தடுக்கும் பீநசம், திரி விழுதல் போன்ற 18 வகை பீநசங்கள், கண்திமிரம் (நேத்திரத் திமிரம்) எனும் திமிரரோகம் .	ஸ்நானம் செய்ய மற்றும் புற உபயோகத்துக்கு.
172. பீனிசத் தைலம் தேரையர் தைல வர்க்கம்	எல்லா வித பீனிசங்கள், நாட்பட்ட ஜலதோஷம் தலைவலி.	வாரத்திற்கொரு முறை தேய்த்துக் குளிக்கவும். நான்கு நாட்களுக்கு ஒரு முறை நசியமிடவும்.
173. புங்கத் தைலம் இம்ப்காப்ஸ்	சொறி, சிரங்கு, புண், புரையோடும் ரணம்.	வெளி உபயோகம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
174. இரசத் தைலம் தேரையர் தைல வர்க்கம்	குஷ்டம், வெள்ளை, பறங்கிப்புண், நுணாக்காய் கிரந்தி, புண், படர் தாமரை, சிரங்கு, வெடியுப்புப் புண், கைகால் உடல் கரும்புள்ளி நோய், சதுமணி நோய், யானைக்கால், மேகக்கசிவு, கண்டமாலை. மற்றும் காது நோய், கண் நோய்களுக்கும் நல்லதே.	வெளிப் பிரயோகம். உள்ளுக்கு 15 - 30 மி. லி. (1 - 3 நாட்கள்) விதம் கொடுக்கவும். உப்பு, புளி இல்லாப் பத்தியம்.
175. சீரகத் தைலம் தேரையர் தைலவர்க்கம்	பித்த மயக்கம், கண்ணோய், தலைவலி, வாந்தி, மாந்தம், அள்ளு நோய்.	வெளி உபயோகத்திற்கு. தலைக்குத் தேய்த்துக் குளிக்க.
176. சிவனார் வேம்பு குழித் தைலம் போகர் வைத்தியம் - 700	குஷ்டம், கரப்பான், குறைநோய், நாட்பட்ட விரணம், விஷம், உளைச்சல், வாயு, சூலைப்புண், மேகம், கட்டி, வண்டுக்கடி. மேற்பூச்சாயும் இடுக.	5 - 10 துளிகள், சிவனார் வேம்பு சூரணத்துடன் 45 நாட்களுக்கு உள்ளுக்கு.
177. சித்தாதி எண்ணெய் நெ.1 அகத்தியர் சில்லரைக் கோவை.	சிரங்கு, அழலை, விக்கல், வாந்தி, குன்மம், கிரந்தி, அரையாப்பு, பைத்தியம், சூலை, பறங்கிப் புண், வலி, காதடைப்பு, பூச்சி வெட்டு, சூதக வெட்டை, பவுத்திரம், பொருமல், கண்ணொரிவு. மற்ற விவரங்களுக்கு சி.ம.செ.மு பார்க்கவும்.	5-15 துளிகள் பால் (அ) வெந்நீருடன். சிலர் சோம்புக் குடிநீர் (அ) நீராகாரத்துடன் கொடுப்பதுண்டு.
178. சித்தாதி எண்ணெய் நெ.1 இம்ப்காப்ஸ்.	சிரங்கு, அழலை, விக்கல், வாந்தி, குன்மம், கிரந்தி, அரையாப்பு, பைத்தியம், சூலை, பறங்கிப் புண், வலி, காதடைப்பு, பூச்சி வெட்டு, சூதக வெட்டை, பவுத்திரம், பொருமல், கண்ணொரிவு. மற்ற விவரங்களுக்கு சி.ம.செ.மு பார்க்கவும்.	5-15 துளிகள் பால் (அ) வெந்நீருடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அனுபானமும்
179. உளுந்துத் தைலம் தேரையர் தைல வர்க்கம்	சிரக்கம்பம், கரக்கம்பம், பலவித வாத ரோகங்கள், நடுக்கம், நரம்பு சம்பந்தமான வியாதிகள் (கம்பம் நடுக்கம்) . நரம்புத் தளர்ச்சி.	வெளி உபயோகத்திற்கு மட்டும். பிடித்தைலமாக உபயோகிக்கலாம்.
180. வாத கேசரித் தைலம் தேரையர் தைல வர்க்கம்	வாத ரோகம், திமிர்வாதம், பாரிச வாதம், முடக்கு வாதம், மூட்டு வாதம், தசைப் பிடிப்பு, ஊமைக்காயம்.	வெளி உபயோகத்திற்கு பிடித்தைலமாகப் பயனாகிறது.
181. விரண சஞ்சீவித் தைலம் தேரையர் தைல வர்க்கம்	சகல விரணங்களுக்கும் நல்லது. வெற்றிலையில் தோய்த்துத் தின்ன சன்னி பாதம் தீரும்.	மேலே தடவவும், சுட்டுக் கட்டவும்.
182. லகுவிஷ முஷ்டித் தைலம் தேரையர் தைலவர்க்கம்	வாத ரோகங்கள்.	மேலே தடவிப் பிடிக்கவும்.
183. வெள்ளை எண்ணெய் இம்ப்காப்ஸ்	வெள்ளை, குன்மம், கீல்வாயு, வீக்கம், குழந்தைகளின் மாந்தம், மேகநோய், குடற்பூச்சிகள், மலக்கட்டு. உப்பில்லா பத்தியம்.	15-30 மி. லி. வீதம் காலை ஒரு வேளை மட்டும். 3-5 நாட்களுக்கு

பிரிவு - 12 நெய் (ஆ: க்ருத)

184. ஆடாதோடை நெய் அகஸ்தியர் - 1500	நாட்பட்ட சுரம், காசம், க்ஷயம் (எலும்புருக்கி), நெஞ்சுவலி, கிறுகிறுப்பு, ஈளை, வலி, இருமல், இரைப்பு, தொண்டைக்கட்டு, பித்த பாண்டு, மூலம், வெப்பு, கண்ணெரிச்சல், அஜீரணம், மாந்தம். உடலெரிச்சலில் வெளி உபயோகமாகப் பயன்படுத்தவும்.	1/2 - 1 தேக்கரண்டி வீதம் மூன்று வேளைகள் சுக்குக் கியாழத்துடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயரும் ஆதாரமும்	உபயோகக் குறிப்பு	அளவும், அநுபானமும்
